மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
இலுப்பூர்
முன்னிலை:  திருமதி. M. சாதத்துனிஷா , பி.ஏ.பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்.
2026-ம்  ஆண்டு ஜூலை மாதம் 10ம் நாள் வெள்ளிக் கிழமை

குற்றவியல் பல்வகை மனு எண். 357/2026

இளையராஜா
த/பெ.கருப்பையா ..... மனுதாரர்/  எதிரி

//எதிராக//

அரசுக்காக
காவல்  உதவி ஆய்வாளர்
அன்னவாசல் காவல் நிலையம்,
குற்ற எண். 166/2026. .. எதிர்மனுதாரர்/புகார்தாரர்

மனுவானது  பிரிவு 480 BNSS -ன் கீழ் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவானது 10.07.2026. தேதியில்  என் முன்னிலையில் விசாரணைக்காக வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருமதி.D.மாரிக்கண்ணு  அவர்களும், அரசுக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்குரைஞர்  அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1. இம்மனுவானது பிணை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
2. மனுதாரர்/எதிரி U/s.303(2) BNS Act-ன் கீழ் குற்றம் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

3. மனுதாரர்/ எதிரி தரப்பு வழக்குரைஞர் தனது வாதுரையில், மனுதாரர்/ எதிரி மீது குற்றச் சம்பவம் நடைபெற்றதாக புகார்தாரர் கொடுத்த பொய் புகாரின் பேரில், கடந்த 10.06.2026ம் தேதி அன்னவாசல் காவல் துறையினர் குற்ற எண்.166/2026ன் கீழ் U/s.303(2) of BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு மனுதாரர்/எதிரியை அன்னவாசல் போலீசார் கடந்த 11.06.2026ம் தேதி கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்து நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என்றும், மனுதாரர்/ எதிரி மேற்படி புகாரில் கொடுக்கப்பட்ட எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்றும், மனுதாரர்/ எதிரி மீது பொய்யான புகார் கொடுத்து அதன் அடிப்படையில் குற்றவழக்கில் சம்பந்தப்பட்டதாக அன்னவாசல் காவல் துறையினர் சரிவர விசாரணை செய்யாமல் புள்ளிவிபர கணக்கிற்காக பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும்,  மனுதாரர்/ எதிரியை பிணையில் விடுவித்தால் நீதிமன்ற நிபந்தனைகளை ஏற்று நடக்க தயாராக உள்ளார் என்றும், மனுதாரர்/ எதிரி வாய்தா காலங்களில் நீதிமன்றத்தில் தவறாமல் ஆஜராவார் என்றும்,  மனுதாரர்/ எதிரிக்கு பிணைமுறிவு ஆவணங்களை எழுதிதர உறவினர்கள் தயாராக உள்ளனர் என்றும்,  எனவே

எதிரியை பிணையில் விடும்படியும் கேட்டு இந்த பிணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பில், இவ்வழக்கின் எதிரி கைது செய்யப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டச்சிறையில் இருந்து வருகிறார் என்றும், எதிரிக்கு பிணை வழங்கும் பட்சத்தில் தொடர்ந்து இதே குற்றச்செயலில் ஈடுபடுவார் என்பதாலும், இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருவதால் சாட்சிகளை கலைக்கக் கூடும் என்பதாலும் எதிரிக்கு பிணை வழங்க ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

5) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இவ்வழக்கின் எதிரி கைது செய்யப்பட்டு கடந்த 11.06.2026ம் தேதி முதல் புதுக்கோட்டை மாவட்டச்சிறையில் இருந்து வருகிறார் என்பதைக் கருத்திற்கொண்டும், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதைக் கருத்திற்கொண்டும், மேலும் இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மைகளை கருத்திற்கொண்டும், இந்நீதிமன்றம் எதிரியை நிபந்தனையுடன் பிணையில் விட முடிவு செய்கிறது.

6) இறுதியில் இம்மனுவானது நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்:</u>**

1.மனுதாரர்/எதிரி தனக்காக தலா. ரூ.10,000/- பெறமானமுள்ள பிணைமுறியையும், அதே தொகைக்கு ஈடாக தலா இரண்டு ஜாமீன் வழங்கவும் உத்தரவிடப்படுகிறது.
2. மனுதாரர்/எதிரி தினமும் காலை 10.30 மணியளவில் அன்னவாசல் காவல் நிலையத்தில் 30 நாட்களுக்கு ஆஜராகி கையெழுத்திட வேண்டும்.
3.மனுதாரர்/எதிரி வழக்கின் புலன் விசாரணையில் குறுக்கிட கூடாது.
4. மனுதாரர்/எதிரி சாட்சிகளை கலைக்க முயற்சி செய்யக் கூடாது.
5. மனுதாரர்/எதிரி மீண்டும் இதே குற்றத்திலோ வேறு குற்றத்திலோ ஈடுபடக்கூடாது.
6.மனுதாரர்/எதிரி இந்நீதிமன்றம் வேண்டும்பொழுதோ அல்லது எதிர்மனுதாரர் காவல் நிலையத்தினர் வேண்டும்பொழுதோ ஆஜராக வேண்டும்.
7. மனுதாரர்/எதிரி இந்நீதிமன்ற மேற்கண்ட நிபந்தனைகளை மீறும் பட்சத்தில் அறிவிப்பு இன்றி மேற்படி பிணை மனு உத்தரவானது ரத்து செய்யப்படும்

M SATHATHUNISHA
Digitally signed by M SATHATHUNISHA
Date: 2026.07.10 13:25:30 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம்**
**இலுப்பூர்.**